[1984 மார்ச் 6

(5) கருத்தரங்கம், கண்காட்சி போன்றவைகளால் கல்வி ஆராய்ச்சி விரிவுரை முதலிய நோக்கத்துடன் நீர் நிர்வாகத்தை பயன்படுத்தல்.

(6) நீர்த்தேக்கத்தின் அளவிற்கேற்ப வேளாண்மை தொழிலில் ஈடுபடுவோர்க்கு நீர் நிர்வாகத்தின் மூலம் வேளாண் துறையினை முன்னேறச் செய்தல்.

(7) மாநில அரசிற்குத் தேவையான தொழில்நுட்ப பரிந்துரைகள் மற்றும் செய்திகளை வழங்கி நீர் சுரங்கத்தில் கிடைக்கும் அரும்பொருட்களை தேவைக்கேற்ப வழிமுறைவகுத்து வழங்கிட பரிந்துரைத்தல்.

(8) ஆராய்ச்சி தொடர்பான கட்டுரைகள், நூல்கள் போன்ற வெளியீடுகளால் நீரினைச் சார்ந்த செய்திகளை வெளிப்படுத்துதல்.

(9) ஆராய்ச்சியின் மூலம் நீர் வளர்ச்சி, கணக்கீடு, நிர்வாகம், சேமிப்பு பயன்படுத்துதல் போன்ற பகுதிகளில் உருவாகும் கொள்கைகட்கு ஏற்ப அதற்குரிய செயல்முறைகளை உருவாக்குதல்.

இணைப்பு X.

(365 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத—125 வினா எண் 14344-க்கான விடையைக் காண்க.)

தமிழ்நாட்டிலுள்ள இந்துசமய நிறுவனங்களைப் பொறுத்து எழும் பொதுப் பிரச்சினைகள் பற்றி கருத்துக்களை அரசுக்கு அவ்வப்பொழுது எடுத்துக் கூறுவதற்கு, செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில், ஓர் உயர் மட்ட ஆலோசனைக் குழு 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் முதற் கூட்டம் 18—11—1981 அன்று திருச்சியில் கூடியது. இக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் :

1. இந்து மக்களின் சமய உணர்வில் உறுதிபாட்டிற்கு தமிழகத்திலுள்ள இந்து ஆலயங்களும், இதர இந்துசமய நிறுவனங்களும் பொதுவாக இயங்க வேண்டிய நிலை.

வழிபாட்டில் எல்லோரும் பங்கு கொள்ளவும், சமயக் காரியங்களில் இந்துக்கள் அனைவரையும் ஈடுபடுத்தவும், தக்க நடவடிக்கைகள் ஆலயங்களில் எடுக்கப்பட வேண்டும்.

2. இந்து சமய வளர்ச்சிக்கு திருக்கோயில்களும், இதர இந்து சமய நிறுவனங்களும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் : திருக்கோயில்களில் பக்தர்கள் சாதிபேதமின்றி ஒருமைப்பாட்டுணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும். இத்தகைய உணர்வை உருவாக்குவதற்கும், ஒற்றுமை நிலை ஏற்படுவதற்கும்

1984 மார்ச் 6]

கூட்டு வழிபாடு உதவும். கிராமங்களில் சமயப் பெரியோர்களின் மத பிரச்சாரம் நடைபெறவேண்டும். ஆலய வரலாற்று நூலை பல மொழிகளில் பிரசுரம் செய்ய வேண்டும். தமிழ் அர்ச்சனை முறையை அதிகமாக மேற்கொள்ள வேண்டும். சீரான நிர்வாகம் நடைபெற வேண்டும்.

3. இந்துக்களின் சமுதாய வாழ்க்கை முன்னேற்றத்திற்கு திருக்கோயில்களும் இதர இந்து சமய நிறுவனங்களும் செயல்படுத்தக் கூடிய ஆக்கப் பணிகள் ;

பண வசதி உள்ள ஆலயங்கள் சிறிய ஆலயங்களுக்கு நிதி தந்து உதவ வேண்டும். பெரிய ஆலயங்களும், மடாதிபதிகளும் கிராமங்களை தேர்ந்தெடுத்துக் கொண்டு, கிராம மக்களின் பல்வேறு வளர்ச்சிக்கான திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக ஏழை எளிய பிற்பட்ட சமூகத்தினர், ஆதி திராவிடர் ஆகியோரின் வாழ்க்கை முன்னேற்றத்தில் தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

4. அறநிலையச் சொத்துக்களிலிருந்து வரும் வருமானத்தை அதிகப்படுத்தக்கூடிய வழி வகைகள் ஆகியவை :

தற்பொழுது இந்து சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான விளை நிலங்களின் குத்தகைதாரர்கள் தங்கள் விருப்பம் போல் உரிமை மாற்றுவதை தடை செய்ய வேண்டும். குத்தகைக் கட்டுப்பாடு நிவாரணச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டும். கூட்டுப்பண்ணை முறையில் சாகுபடி செய்வதைப் பரிசீலிக்க வேண்டும். குறைந்த குத்தகைக்கு விடப்பட்டுள்ள நீண்டகால (99 வருட) குத்தகை ஒப்பந்தம் உள்ள இனங்களில் குத்தகையை ரத்து செய்யவும், நியாயமான குத்தகையை நிர்ணயம் செய்து வசூலிப்பதற்குத் தேவையான நடவடிக்கையை சட்டரீதியில் எடுக்க வேண்டும். மடத்து நிலங்களை அரசு எடுத்துக் கொண்டு நஷ்டஈடு கொடுக்கலாம் என்றும் விவாதிக்கப்பட்டது.

சமீபத்தில் ஏற்படுத்திய சட்ட திருத்தத்தின் விளைவாக ஆலயத்தின் விளைபொருள் பங்கு 40 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. நிலச் சட்டங்களின் சட்ட விதிகளை ஆராய்ந்து இந்த குறைந்த அளவு குத்தகையையாவது சரியாக வசூலித்து ஆலயத்திற்குக் கொடுப்பதற்கு வேண்டிய வழி வகைகளை ஆராய்ந்து கருத்துக்களைத் தெரிவிக்க உயர்மட்ட ஆலோசனைக் குழுவில் செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் தலைமையில் உட்குழு ஒன்று அமைத்து ஆராய்ந்து குழுவின் மூலம் அரசிற்கு தக்கப் பரிந்துரை செய்யலாம்,

மேற்கண்ட பரிந்துரையின் அடிப்படையில் உட்குழு என்று அமைக்கப்பட்டுள்ளது.